செ.வெ.எண்: 74 நாள்: 31.10.2021

# வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு தோட்டக்கலைப் பயிர்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காலங்களில் அதிககன மழைக்கு வாய்ப்புள்ள நிலையில் அறுவடைக்கு தயாராக உள்ள தோட்டக்கலைபயிர்களை பாதுகாப்பதற்கான வழிமுறைகளான தோட்டக்கலைபயிர்களை சாகுபடி செய்த தோட்டங்களில் அறுவடை மேற்கொண்டு பயிர்களை பாதுகாக்கவேண்டும்.

காய்கறிப் பயிர்களான வெண்டை, கத்தரி ,கொத்தவரை ,மிளகாய் மற்றும் கொடிவகைகாய்கள் ஆகியவற்றிற்கு முறையாக மண் அணைப்பது மற்றும் வடிகால் வசதி ஏற்படுத்துவதன் மூலம் நீர் தேக்கத்தினால் வேர்கள் அழுகுவதை தவிர்க்கலாம்.காய்கறி பயிர்களில் காய்ந்துபோன இலைகளை அகற்றவேண்டும். இலைவழி உரமளித்துபயிரின் ஊட்டச்சத்து தேவையைபூர்த்தி செய்தல் வேண்டும். குச்சிபந்தல் அமைத்து கொடிவகை காய்கறிபயிர் செய்வோர் மண் அணைத்தும்,வலுவிழந்தபகுதிகளில் கூடுதல் ஊன்று கோல்கள் அமைத்தும் பந்தல் சாய்வதை தடுக்கவேண்டும்.

மா,கொய்யா,பலாமற்றும் முந்திரி போன்ற பல்லாண்ட பயிர்களில் காற்று மரங்களின் இடையே புகுந்து செல்லும் வகையில் காய்ந்த,பட்டுப்போன,தேவையற்ற பக்ககிளைகள் மற்றும் அதிகபடியான இலைகளைகவாத்து செய்வதன் மூலம் மரத்தின் சுமையைக் குறைத்து காற்றிலிருந்து பாதுகாக்கலாம். கவாத்தின் போது வெட்டப்பட்டபகுதியில் காப்பர் ஆக்சிகுளோரைடு300 கிராம் 1 லிட்டர் நீரில் கலந்துபூசுவதன் மூலம் பூச்சிமற்றும் நோய் தாக்குவதைத்தவிர்க்கலாம். அடிமரத்தை சுற்றிமண் அணைக்கவேண்டும். 1 முதல் 3 வயதுள்ளகன்றுகள் மற்றும் ஒட்டுச் செடிகளை முட்டுக்கொடுப்பதற்குகுச்சிகளை பயன்படுத்துவது சிறந்தது.மரங்களைசுற்றிலும் சுத்தப்படுத்தி நல்லவடிகால் வசதிஅமைக்கவேண்டும்.

வாழைத் தோப்பினைச் சுற்றிவாய்க்கால் எடுத்துமழைநீர் தேங்காமல் வெளியேறவடிகால் செய்யவேண்டும். காற்றினால் பாதிப்புஏற்படும் பகுதிகளில் கீழ்மட்ட இலைகளை அகற்றிவிட்டு மரத்தின் அடியில் மண் அணைத்தும்,சவுக்குஅல்லதுயூகலிப்டஸ் குச்சிகள் மூலம் முட்டுக்கொடுத்தும் வாழைமரம் சாய்வதைதடுக்கலாம்.வாழைத்தார்களை முறையாக மூடி வைத்தல் வேண்டும். 75%-க்குமேல் முதிர்ந்ததார்களை அறுவடைசெய்தல் வேண்டும்.

பசுமைக்குடில் / நிழல்வலைக் குடிலின் அடிப்பாகம் பலமாக நிலத்துடன் இணைப்புக் கம்பிகளால் இணைக்கப்பட்டிருக்கவேண்டும். பசுமைக்குடிலின் உட்பகுதியில் காற்று உட்புகாவண்ணம் கதவுகள் மூடியிருக்கவேண்டும். அருகிலுள்ள பெரிய மரங்களில் கிளைகளை அகற்றிவிடவேண்டும். கிழிந்துபோன நிழல் வலைகளைதைத்து சரிசெய்யவேண்டும். நிழல்வலைக் குடிலின் குழித்தட்டில் தயார் செய்யப்பட்டுள்ள நாற்றுகள் அதிகபடியான மழைநீரினால் பாதிப்படையாமல் இருக்க மழை அதிகம் இருக்கும் தருணங்களில் நெகிழித்தாள்கள் (Plastic Sheet) கொண்டு நாற்றுகளை மூடி பாதுகாக்கலாம்.

இதரதோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்படும் அனைத்து தோட்டங்களிலும் அதிகமழைநீர் தேங்காவண்ணம் உரியவடிகால் வசதிசெய்திடவேண்டும். நீர்பாசனம் மற்றும் உரமிடுதல் ஆகியவற்றை தற்காலிகமாக நிறுத்திவைக்கவேண்டும்.காற்றினால் ஏற்படும் சேதத்தை தவிர்க்ககாற்றுவீசும் திசைக்கு எதிர்திசையில் கயிறு/கழிகள் மூலம் முட்டுக்கொடுத்து காற்றின் வேகத்திலிருந்து புதிதாக நடவுசெய்த செடிகள் மற்றும் மரத்தினைசாயாவண்ணம் பாதுகாத்தல் வேண்டும்.கனமழை அல்லது காற்றுக்குப்பின் மரங்களில் பாதிப்பு இருப்பின்,மரத்தைச் சுற்றிமண் அணைத்து,மரங்களுக்கு தேவையான தொழுஉரம் இடவேண்டும். பூஞ்சாணக்கொல்லிகள் மற்றும் உயிரி நோய்க்கட்டுப்பாட்டுக் காரணிகளை இட்டு நோய் பரவாமல் தடுக்கவேண்டும் என மாவட்டஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்..

**செய்திவெளியீடு: செய்திமக்கள் தொடர்புஅலுவலகம்,நாகப்பட்டினம்.**